**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.03.2020

Accepted: 17.05.2020

Published: 01.07.2020

Citation:
Umarani, R. (2020). Tholkappia Genetic Theories. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 139–144.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3407

*Corresponding Author:
treatgandhi@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tholkappia Genetic Theories

**R. Umarani**
*Ph.D. Scholar, Department of Tamil*
*Periyar University, Salem, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0003-1493-224X

**Abstract -** The genetics at the end of the Tholgappiam explains the protocol that is followed in language and life. Tholkappiyam genetics refers to the way in which the young names, male names, female names of animals and birds were studied in the traditional way.

That is to say, after explaining the youth, male and female of the creatures, one can see that the monogamous creatures have discriminated against the people in the middle. Because these are set to establish that interpolation.

Furthermore, after the threads that are the backbone of genetics, there are distinctions in the text, strategy, and text as a link. Therefore, the purpose of this article is to explain the Tholkappiya economy, the life of the Tamil people and their relationship with animals and birds.

**Key Words:** Tamil Grammer, Marapiyal, Tholkappiyam, Genetics, Interpolation, Creatures.

**References**

1. Aravindan, M. Y., Urai Asiri Yargal, P.188
2. Mohan, R., Cokkalingam, N. Urai Marabu, P.130
3. Manickanar, V.Sp., Tolkappiya Kadal, P.265
4. Tamilannal,Urai Vilakku, P.134.
5. Manickanar, V.Sp., Tolkappiya Kadal, P.266

# தொல்காப்பிய மரபியல் கோட்பாடுகள்

*ர. உமாராணி*
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

***ஆய்வுச்சுருக்கம்:*** *தொல்காப்பியத்தின் இறுதியில் உள்ள மரபியல், மொழியிலும் வாழ்க்கையிலும் தொன்றுதொட்டுப் பின்பற்றப்படும் நெறிமுறையை விளக்குகிறது. தொல்காப்பியம் மரபியலானது விலங்கினங்கள் பறவைகள் என இவற்றின் இளமைப்பெயர்கள், ஆண் பெயர்கள், பெண், பெயர்கள் மரபு வழியில் எவ்வாறு பயிலப்பட்டு வந்தன என்பதைச் சுட்டுகிறது. அதாவது உயிரினங்களின் இளமை, ஆண், பெண் ஆகியவற்றை விளக்கிய பின்னர் ஓரறிவு உயிரினங்களை விளக்கி, பிறகு இடைப்பகுதியில் மக்களைப் பாகுபாடு செய்துள்ளமை பார்க்க முடிகிறது. ஏனெனில் இவை இடைசெருகல் என்பதை நிறுவுவதாக அமைகின்றன. மேலும் மரபியலின் புறனடையாக அமைந்துள்ள நூற்பாக்களுக்குப் பின்னர் ஓர் இணைப்பை போல் நூல், உரை, உத்தி பற்றிய பாகுபாடுகள் இடம் பெற்றுள்ளன. எனவே தொல்காப்பிய பொருளதிகாரம் தமிழ் மக்களின் வாழ்வியலையும் விலங்குகள், பறவைகள் என அஃறிணை உயிர்களுடனான உறவையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தொல்காப்பியம், பொருளாதிகாரம், மரபியல், உயிரினங்கள்*

தொல்காப்பியத்தில் நிறைவுசெய்யும் இயல் மரபியலாகும். முன்னோர்களின் மொழி மரபானது வலிமையானது. உலகமானது நிலம், நீர், வளி, விசும்பு, தீ ஆகியன கலந்துள்ள மயக்கம் என்பதையும், அதுபோல இருதிணை ஐம்பால் சொற்கள் கலந்துள்ள இவற்றை மரபு திரியாமல் வழக்கில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும்நோக்கில் மரபியலானது அமைந்துள்ளது. தொன்றுதொட்டு வழங்கி வருவதும் மாற்றம் ஏற்படாமல் இருப்பதும் மரபு எனப்படும். இக்கொள்கையைப் பின்பற்றி தமிழ் மொழியிலும் மரபுநிலை மாறாமல் செ ாற்கள் இலக்கியங்களில் கையாளப்படும் சூழல் உள்ளது. இலக்கியங்களுக்கு மொழியிலும், சொற்பொருள் நிலையிலும் வழங்கப்பட்டு வருகிறது. இல்லையெனில் மாற்றம் ஏற்படின் பொருள் புலப்பாட்டிலும் பொருள் மயக்கம் ஏற்படக்கூடும். எனவே பொருள் புரியாத சூழலை அவை விளைவிக்கும். எனவே அச்சூழலைக் காரணமாகக்கொண்டு தமிழ் மொழியில் மரபானது பின்பற்றப்பட்டுள்ளது.

மரபு என்பதற்கு தொல்காப்பியனார் மரபு என்று கூறித் தொன்றுதொட்டுக் காலமாக பெயரிலும், உயிரினப் பாகுபாடு, வருணப்பாகுபாடு, ஐந்நில பாகுபாடு என்ற ஒவ்வொன்றுக்கும் மரபினைக் குறிப்பிட்டும், இலக்கண இலக்கியங்களில் மரபு எவ்வாறு பின்பற்றப்பட வேண்டும் என்னும் உத்தியைக் குறிப்பிட்டுள்ளார்

## மரபியல் கோட்பாடு

மரபானது கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு விளங்குகிறது,

**"மரபு நிலை திரியிற் பிறிது பிறிதாகும்"**
**(தொல்.பொருள். 637)**
**"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**
**மரபு வழிப்பட்ட சொல்லினான"**
**(தெல்.பொருள். 636)**

மரபானது திரிந்தால் பொருள் மாறுபாடு ஏற்பட்டு வேறொரு பொருளைக் குறிப்பிடும். எனவே மரபு என்பது பிரியாமல் சொற்களில் கையாளப்பட காலம் காலமாகத் தொன்றுத் தொட்டு வழங்கப்பட்டு வரும் சூழலையே மரபுநிலை எனலாம்.

மரபின் அவசியத்தைக் கண்டறிந்த தொல்காப்பியர் தமிழ் மொழிக்கெனத் தனி ஒரு மரபியல் கோட்பாட்டை வகுத்துள்ளார். இதனைத் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தின் மரபு குறித்த சிந்தனைகளை விளக்குவதாக அமைந்துள்ளது. இம்மரபியல் கோட்பாட்டின் சிந்தனை வழி தமிழ் மொழியில் சொற்பொருள் மரபு மாறாத்தன்மை, சங்க இலக்கியங்களில் பின்பற்றப்பட்டுள்ளதை அறிவதாகயுள்ளது.

மரத்திலிருந்து வித்து, வித்திலிருந்து மரம் எனத் தொடர்ந்து இயல்பு மாறாமல் வழிவழியாக வரும் மரபு பெயரிலிருந்து மரபு வந்தது. மரத்தின் இயல்பே மரபின் இயல்பும். மரபு என்பது மரத்தின் வழியே பெற்ற பெயர் என்று இளங்குமரனார் தொல்காப்பியத்திற்கு எழுதிய ஆராய்ச்சி உரையின் (ப.1) வழி விளக்குவதை உணரமுடிகிறது.

## மரபியல் அமைப்பு

தமிழர் வாழ்வில் இலக்கியத்தில் பல நிலைகளிலும் மரபின் முக்கியத்துவத்தை உணர்ந்த தொல்காப்பியர் பல மரபுகளை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றின் வழி சொல்லி செல்கின்றார் மரபின் விளக்கம் அவ்வதிகாரங்களுள் அமையாமைமயை உணர்கின்றார். மேலும் செய்யுள், வழக்குடன் உலக வழக்குக்கும் பொதுவான சில மரபுகள் இருப்பதையும் உணர்கின்றார். எனவே மரபினை நன்றாக விளக்க வேண்டும் என்று எண்ணி அதனையும் சில சான்றுடன் வெளிப்படுத்த எண்ணினார். எனவேதான் "மாற்றாருந் சிறப்பின் மரபியல்" என மாற்றுவதற்கு அறியாதவை என மரபியலை தொடங்கி வழக்குக்கும், செய்யுளுக்கும் உரிய சில மரபுகளைத் தேர்ந்து எடுத்து அவற்றை விளக்குகின்றார். அவர் நூலில் இறுதியில் இடம் பெறும் தன்மையும் மரபியல் பெறுகின்றது (ப.31) என்று கே. பகவதி மரபியலுக்கான விளக்கத்திணைச் குறிப்பிடுகின்றார்.

## வைப்பு முறை

மரபியலில் மரபுப்பெயர்களைக் குறிப்பிட இனம் முழுமையும் சுட்டடல், ஒரு நூற்பா ஒரு மரபுப் பெயர், ஒரு நூற்பா சில மரபுப் பெயர், பல நூற்பா ஒரு மரபுப் பெயர், தொகை கூறாது விரியுள் கூறல், தொகை கூறி விரியுள் மரபுப் பெயர் சுட்டி விலங்கு கூறல், விலங்கு கூறி மரபுப்பெயர் சுட்டல், ஒத்த தோற்றமுடையன கூறல், ஓரின விலங்குகளை ஒருங்கு கூறல், பெரும்பான்மை முன்னும், சிறுபான்மை பின்னும் கூறல், நிறுத்த முறையான் கூறல், முறை மாற்றி கூறல், எதிர்மறையாகக் கூறல், ஒரே நூற்பா இரண்டு இடத்தில் இடம் பெறல், அடைமொழி நடை, புறனடை கூறல் என்ற முறையில் மரபுப் பெயர்களில் வைப்பு முறையானது பின்பற்றப்பட்டுள்ளது. மற்றவை தனித்தனி நூற்பா மூலம் விளக்கியுள்ளார்.

## இளமைப் பெயர்கள்

தொல்காப்பியத்தின்இலக்கணக்கொள்கையானது இலக்கியம்படைப்பதற்கானநெறிமுறையைச் சுட்டிக் காட்டுகிறது. தொல்காப்பியத்தின் மரபியலில் உயிரினங்களின் இளமைப் பெயர்களாக "மாற்றருஞ் சிறப்பின" (தொல்.

பொருள். 545) என்ற நூற்பா வழி இளமைப் பெயர்கள் ஒன்பதினைக் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியங்களில் உயிரினங்களின் பெயர்கள் மரபுமுறையில் எவ்வாறு வழங்கப்பட்டன என்பதை விளங்குவனாக விளங்குகின்றது. தொல்காப்பியர் இளமைப்பெயர்களாகப் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்ற ஒன்பது பெயர்களைக் குறிப்பிடுவதையும், அவை காலம்காலமாக இலக்கியங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வரும் போக்கினையும் பார்க்க முடிகிறது. எல்லா உயிரினங்களுக்கும் இளமை என்பது பொதுவாகும்.

| வ. எண் | வகை | மரபுப் பெயர்கள் |
|---|---|---|
| 1. | பறவை | பார்ப்பு, பிள்ளை |
| 2. | தவழ்பவை | பார்ப்பு, பிள்ளை |
| 3. | விலங்கு | பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி |
| 4. | ஓரறிவுயிர் | கன்று, பிள்ளை, குழவி |

பறவைகள், விலங்குகள், மக்கள் என்று அனைத்தும் பழங்காலம் முதல் இக்காலம் வரை மரபு முறையில் பெயர்கள் வழங்கப்பட்டு வரும் சூழலைக் காணமுடிகிறது. இளமை என்பதை ஓர் வரையறைக்குள் அடக்கலாம். ஆனால் முதுமையை ஓர் வரையறைக்குள் அடக்க முடியாது என்னும் கருத்தினை (ப.3) வெள்ளைவாரணர் குறிப்பிடுவதைக் கொண்டு அறியலாம்.

## ஆண்பாற் பெயர்கள்

எல்லா உயிரினங்களில் ஆண் இனமானது சில மரபுப் பெயர் அடிப்படையில் அமைந்து உள்ளதை அறியலாம். தொல்காப்பியர் மரபுப்பெயர்களை இளமை, ஆண்மை, பெண்மை என்று வகைப்படுத்தி மரபு முறையில் அவற்றிற்கான பெயர்களை பாகுப்படுத்தியுள்ளார். அவை எருது, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், கண்டி, கடுவன், போத்து என்று (தொல். பொருள்.546) நூற்பா வழி விளக்குகின்றார்.

சங்க காலத்தில் இருந்து இலக்கியங்கள் அனைத்திலும் ஆண் பெயரானது விலங்கினங்களுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது “மாசு” என்னும் பெயர் விலங்கினங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. நேரடியாக விலங்கு என்னும் பெயர் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை. களிறு என்னும் பெயரினைப் பெற்று வருவதையும் அறியமுடிகிறது. களிறு என்னும் பெயரானது யானையினை அதிகமாகக் குறிப்பிட்டு இலக்கியங்களில் அதிகமான இடங்களில் இடம் பெற்றுள்ளது.

| வ.எண் | வகை | மரபுப் பெயர்கள் |
|---|---|---|
| 1. | விலங்கு | ஏறு, ஏற்றை, இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், கண்டி, கடுவன், ஏற்றை, சேவல், போத்து, ஒருத்தல் |
| 2. | பறவை | சேவல் |
| 3. | நீர் வாழ்வன | ஏறு, ஏற்றை, ஒருத்தல், போத்து |
| 4. | மக்கள் | ஆண் |
| 5. | ஓரறிவுயிர் | ஆண் |

## பெண்பாற் பெயர்கள்

சங்க இலக்கியத்தில் தொல்காப்பியரின் மரபியல் நெறிமுறை பின்பற்றப்பட்டுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் சில பெயர்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை. எனவே, தொல்காப்பியம் சங்க இலக்கியத்திற்கு முற்பட்டது என்பதே

இம்மரபுப் பெயர்கள் வழி விளங்குவனாக உள்ளது. உயிரினங்கள் அனைத்தும் மரபு முறையில் குறிப்பிடப்படுவதை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன.

மரபியலை எட்டாவது இயலாகக்கொண்டு செய்யுளியலை ஒன்பதாவதாகப் பேராசிரியர் குறிப்பிடுவதும் உண்டு. வழக்கிலும், செய்யுளிலும் உள்ள இலக்கணத்தைச்செய்யுளில்கூறுவதால் அதனை ஒன்பதாவதாகக் கொள்ளலாம் என்று பேராசிரியர் கூறுவதைப் பார்க்க முடிகின்றது. இதனை அகம், புறம், களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு, மரபு என்பவை யாவும் மரபியல் செய்யுள் உறுப்புகள் அவற்றைக் கூறியபின் செய்யுள் இயலை இறுதியில் வைக்க இடமுண்டு என்றும், மரபும் பிற உறுப்பினைப் போன்று செய்யுள் இயலின் முன்னிற்க வாய்ப்பு மிகுதி என்பதையும் கொண்டு இயல் மாற்றுமுறை என்பதை உரை எழுதும் பேராசிரியர் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கதாகும்.

ஒலிகளை வரையறை செய்து அவற்றிற்கான எழுத்து, உருவம் கொடுப்பது எழுத்ததி காரத்திலும், உயர்திணை, அஃறினை என்ற அடிப்படையில் சொற்களை மயங்கும் தன்மைகொண்டது. மயங்காதன்மை கொண்டது என்று அதாவது அவற்றின் மரபினைச் சொல்லதிகாரத்திலும், வாழ்வியலை அகம், புறம் என வகுத்து திணை, ஒழுக்கம், பண்பாடு, சூழல், உறவு, தகுதி, குறிப்பு ஆகியவற்றால் ஏற்படும் பொருள் மரபுகளைக் காட்டுவது பொருளதிகாரம் ஆகும். எனவே பொருளதிகாரத்தில் மற்ற இயல்களில் கூற முடியாததை மரபியலில் கூறியுள்ளார். ஏனெனில் இளமைப் பெயர், ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர், உலகத்தோற்றம், உயிரின் பரிமாண வளர்ச்சி, மனிதன் உருவாக்கிய சமூக அமைப்பு, நூலாக்க மரபு என்பவை குறிப்பிடப்படுகின்றன.

| வ.எண் | வகை | மரபுப் பெயர்கள் |
|---|---|---|
| 1. | விலங்கு | பிடி, நாகு, பெட்டை, மூடு, பிணை, கடமை, பிணவு, பாட்டி, பிணவல், மந்தி |
| 2. | புறவை | பேடை, பெடை, பெட்டை, அளகு |
| 3. | நீர் வாழ்வன | நாகு |
| 4. | மக்கள் | பெண், பிணா |
| 5. | ஓரறிவு | பெண் |

இவை தொல்காப்பியர் குறிப்பிடும் மரபு முறையில் பெண் உயிரினங்கள் அனைத்திற்கும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

பொதுவாக மரபியலில் அதாவது அதனுடைய அமைப்பு முறையில் சில பிறழ்ச்சிகள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்பது உண்மை. பெண்ணும், ஆணும், பிள்ளையும் அவையே என்ற நூற்பாவை 70வது நூற்பாவை பார்க்கும்போது பெண்பாற் பெயர், ஆண்பாற் பெயர், பிள்ளைப் பெயர் என்ற முறையில் மரபியல் நூற்பா அமைந்திருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

இளமைப் பெயரை முதலில் அமைத்து அதுவே தொடக்கமாக கூறுவதை “மாற்றருஞ் சிறப்பின் மரபியல்” என்ற அடியில் குறிப்பிடுகின்றார். பெண்ணும் ஆணும் பிள்ளையும் என்று 70வது நூற்பா தொடங்கி 89வது நூற்பாவின் இடையில் நான்கு சாதிகள் பற்றிக் குறிப்பிடுவது பிறழ்ச்சி அதாவது முரண்பாடு. ஆண்பால், பெண்பால் பெயர்களைக் குறிப்பிட்டுப் பிறகு மீண்டும் கடுவன் என்ற நூற்பாவைக் குறிப்பிட்டுப் புறனடை என்று கூறுவது பொருந்தாது. முறை பிறழ்ச்சி என்று குறிப்பிடலாம்.

மரபு என்பது தொன்றுதொட்டு வருவது; அறிவில் உயர்ந்தோரால் உருவாக்கப்பட்டது.

பன்னெடுங்காலமாக பழகத்தின் விளைவு, மரபு, முறைமை, இயல்பு என்று மரபுக்கான விளக்கத்தினை அறியலாம். இயற்கையில் உருவான உயிரினங்கள் அனைத்தும் மரபு முறையில் பெயர்கள் சுட்டப்படுகின்றன். உயர்திணை, நான்கு சாதி பற்றி கூறுவது முரண்பாடாகாது. ஐம்பூதம், உத்தி வகை போன்றவை பிற்காலத்தில் தான் வளர்ச்சி பெற்றன. தொல்காப்பியர் காலத்தில் மரபு எவ்வாறு பின்பற்றப்பட்டது என்பதைக் குறிப்பு முறையில் குறிப்பிடுவதாக அமைகிறது.

**அடிக்குறிப்பு**

1 மு.வை.அரவிந்தன் உரையாசிரியா்கள் ப.188
2 இரா.மோகன் நா.சொக்கலிங்கம் உரைமரபு ப.130
3 வ.சுப மாணிக்கம் தொல்காப்பபியக் கடல் ப.265
4 தமிழண்ணல் உரை விளக்கு.ப.134.
5 வ.சுப மாணிக்கம் தொல்காப்பியக் கடல் ப.266